பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 12 | திங்கட்கிழமை | 24.02.2025 | அதிர்வு 205

## அம்பாறையிலும் துப்பாக்கிச்சூடு!

### ஒருவர் உயிரிழப்பு



அம்பாறை மாவட்டம், தெஹியத்தகண்டிய பகுதியில் உள்ள தனியார் பண்ணை ஒன்றில் 07

## எமது நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

### இப்படி மொட்டுக் கட்சி கூறுகின்றது



"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி இவ்வாறுதான் தொடரும் எனில் எமது நாட்டை கடவுளின் பொறுப்பிலேயே விட வேண்டும். வரவு – செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும் தேசிய பாதுகாப்பு சமூகத்தில் பேசுபொருளாகியிருக்கின்றமை நாட்டின் பாரதூரமான நிலைமையையே காண்பிக்கின்றது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி 07

# அரசின் மமதையே துப்பாக்கிச்சூட்டுக்கு பிரதான காரணம்!

### சஜித் அணி சாடல்



**"அரசின் மமதையும் பலவீனமுமே நாட்டில் தொடர்ச்சியாகப் பதிவாகிக் கொண்டிருக்கும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்குப் பிரதான காரணிகளாகும். இவை தேசிய பாதுகாப்பில் மாத்திரமின்றி சுற்றுலாத்துறையின் ஊடாக பொருளாதாரத்திலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்."**

**– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.** 07

## அரசமைப்பின் அதிகாரத்துக்கு அமையவே உள்ளூராட்சி தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும்

### தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பு



"அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும். வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்ததன் பின்னரே தேர்தலுக்கான வாக்கெடுப்பு திகதி அறிவிக்கப்படும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் 07




நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் மகனின் திருமணம் நேற்று முன்தினம் கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

வந்திருந்த பிரமுகர்கள் பலரில் முன்னாள் ஜனாதிபதிகள் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், ஹக்கீம் ஆகியோர் ஒரு மேசையில் அருகருகே அமர்ந்து கல்யாணத்தின் மதிய போசன விருந்தை அருந்திக் கொண்டிருந்தனர்.

அப்போது நாட்டின் முக்கிய ஒரு பிரச்சினை குறித்து சுமந்திரனின் கருத்தை ரணில் விக்கிரமசிங்க கோரினார்.

இதுவரை நாட்டின் பிரதம நீதியரசராக இருந்த ஜயந்த ஜயசூரிய அந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற கையோடு நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்படுகிறார், அது சரியான செயலா என்று சுமந்திரனின் கருத்தைக் கேட்டார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 06




# மிக விரைவில் குட்டித் தேர்தல்

## ஜனாதிபதி அநுர உறுதி



உள்ளூராட்சி சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கு அரசு எதிர்பார்க்கின்றது என்றும், தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எந்த வித சட்ட ரீதியான தடைகளும் இல்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டின் பின்னர் பொது மக்களுக்காக விசேட தலதா காட்சிப்படுத்தல் ஒன்றை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

அது தொடர்பில் மல்வத்து, அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் கலந்துரையாடியதாகவும், மத்திய மாகாண ஆளுநர், கண்டி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் தலதா மாளிகையின் தியவடன நிலமே ஆகியோர் இணைந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இணங்கியதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையை நேற்று ஞாயிற்றுக்கிழமை தரிசித்த பின்பே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

மல்வத்து மகா விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, மல்வத்து மகா விகாரையின் மகாநாயக்க திப்படுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரைச் சந்தித்து நலன் விசாரித்ததுடன், சிறிது நேரம் கலந்துரையாடினார். அவர் தலைமையிலான மகா சங்கத்தினர் செத்,பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

பின்னர் அஸ்கிரிய மகா விகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி, அஸ்கிரிய மகா விகாரையின் வண. வரகாகொட ஶ்ரீஞானரத்ன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டதுடன் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர்கள் மற்றும் சங்கச் செயற்குழு உறுப்பினர்களும் இதன்போது கலந்து கொண்டிருந்ததுடன், மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கினர்.

அதனையடுத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாட்டின தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுக்களிடையே மோதல்கள் வலுப்பெற்றிருந்தாலும் அது பொதுமக்களின் பாதுகாப்புக்குச் சிக்கலாக அமையவில்லை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதுவரையில் அரசியல் அனுசரணையில் வளர்ச்சி கண்ட பாதாள உலகக் குழுக்களை முழுமையாகக் கட்டுப்படுத்த தற்போதைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

அதேபோல் உள்ளூராட்சி சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கு அரசு எதிர்பார்ப்பதாகவும், தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எந்தவித சட்ட ரீதியான தடைகளும் இல்லை என்றும், அதற்குத் தேவையான நிதியையும் அரசு ஒதுக்கியிருக்கும் நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குனசேன, பிரதி அமைச்சர் வைத்தியர் ஹங்சக விஜயமுனி, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துஷாரி ஜயசிங்க, தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல பண்டார உள்ளிட்டவர்கள் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.








# யாழில் உருக்குலைந்த நிலையில் வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் – கோப்பாய் பகுதியில் உருக்குலைந்த நிலையில் வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

கோப்பாய் – கட்டைப்பிராய் பகுதியைச் சேர்ந்த பிரவுண்ராசா நாகேஸ்வரி (வயது 78) என்ற வயோதிபப் பெண்ணே நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி பெண்ணின் கணவர் உயிரிழந்த நிலையில் தனது சகோதரனுடன் வசித்து வந்துள்ளார். இந்நிலையில், நேற்று உருக்குலைந்த நிலையில் அவரது வீட்டுக் கிணற்றடியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகச் சடலம் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள் ளது.

# ஊடகர் சமுதித்தவுக்கு பொலிஸ் பாதுகாப்பு

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரம நேர்காணல் செய்த நான்கு பேர் மரணித்ததை அடுத்து அவருக்கு உயிர் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இந்நிலையில், சமுதித்த சமரவிக்ரமவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவின் நான்கு பொலிஸ் அதிகாரிகள் தனக்கு பாதுகாப்பு வழங்க நிய மிக்கப்பட்டுள்ளனர் என்று சமுதித்த சமரவிக்கிரம தெரி வித்துள்ளார்.

சமுதித்த சமரவிக்கிரமவினால் நேர்காணல் செய்யப்பட்ட நான்கு பேர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள் ளனர்.

அண்மையில் மித்தெனிய பகுதியில் இடம்பெற்ற துப் பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை அடுத்து சமுதித்த சமரவிக்கி ரம தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் அதிகாரி களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

நாடாளுமன்றத்திலும் இந்த விடயத்தை எடுத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நீதிபதிகள் மற்றும்



குறிப்பாக ஊடகவியலாளர்களின் பாதுகாப்பைப் பலப்படுத் துமாறு அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

கடும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் சமுதித்த சமர விக்கிரம போன்ற ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றும் நாட்டில் அதியுயர் வெப்பம்




நாட்டின் பல மாகாணங்களில் இன்றைய தினமும் மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலையானது எச்சரிக்கை மட்டத்துக்கு உயரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வுகூறியுள்ளது.

அதன்படி, மேல், வடமேல், வடக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் வெப்பநிலை எச்சரிக்கை மட் டத்துக்கு உயர்வடையக்கூடும் என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்காரணமாக வீடுகளில் உள்ள முதியோர் மற் றும் நோயாளர்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள் ளது.







# வடமராட்சி சக்கோட்டையில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்

யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி சக்கோட்டையில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் நேற்று இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோர் இணைந்து கொண்டனர்.

கடற்கரையோரங்களை துப்பரவு செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார், சாரணிய இயக்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் என 1505 பேர் வரையானோர் கலந்து கொண்டனர்.
















# முல்லை. அளம்பில் கடற்கரையில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்

(பா.சதீசன்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு பகுதி கடற்கரையை சுத்தம் செய்யும் பணி நேற்று இடம்பெற்றிருந்தது.

“சுத்தமான கடற்கரை – கவர்ந்திழுக்கும் சுற்றுலாத்தளம்” எனும் தொனிப்பொருளை அடைவதற்கு மாவட்ட மட்டத்தில் உள்ள கடற்கரைகளை தூய்மைப்படுத்துவதற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுமார் 20 கடற்கரை பிரதேசங்களில் தூய்மைப்படுத்தும் இந்த வேலைத்திட்டம் நேற்று காலை ஆரம்பமாகிய நிலையில், முல்லைத் தீவு அளம்பில் வடக்கு, தெற்கு பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அளம்பில் வடக்கு கிராம சேவையாளர் ஜீவன்ராஜ் தலைமையில் ஆரம்பமாகிய தூய்மைப்படுத்தும் நிகழ்வில் அளம்பில் தெற்கு கிராம சேவையாளர் காளிங்கராஜா, அளம்பில் வடக்கு கிராம சேவையாளர் ஜீவன்ராஜ், அளம்பில் வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தகுமார், அளம்பில் தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் கொட்வின், மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சந்திரிக்கா, சிறீலங்கா சிங்க ரெஜிமண்ட் 10 ஆவது படையணியின் இராணுவ அதிகாரி மேஜர் மாறசிங்க, மற்றும் இராணுவத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு தூய்மைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.



















# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“இல்லை. நாட்டில் நீதித்துறையில் மிக உயர் பதவியான பிரதம நீதியரசர் தரத்தில் கடமையாற்றிய ஒருவர் அதன் பிறகு கீழ்பட்ட அரச பணி ஒன்றுக்காகப் பதவியேற்பது அவர் வகித்த பிரதம நீதியரசர் பதவிக்கு இழுக்குச் சேர்ப்பதாகும். அது மட்டுமல்ல, அந்தப் பதவியை அரசிடமிருந்து பெறுவதற்காக அவர் தம்முடைய பிரதம நீதியரசர் பதவியை பக்கம்சாராமல் நீதியாக ஆற்றியிருப்பாரா என்ற கேள்வியை அது எழுப்பும் என்ற காரணத்தினால் அப்படி பதவி ஏற்பது முறையற்றது” என்ற சாரப்பட பதிலளித்தார் சுமந்திரன்.

அதுமட்டுமல்ல, முன்னர் பிரதம நீதியரசராக இருந்த அசோகா டி சில்வா 2011 மேயில் தாம் ஓய்வு பெற்றதும், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட சட்ட ஆலோசகராகப் பதவி ஏற்றார், அப்போது அது சட்டத்துறையினரால் பெருந் தவறு எனக் கடுமையாக விமர்சிக்கப்பட்டது என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அந்தத் தகவல் சரியானது என்று அருகில் அமர்ந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆமோதித்தார்.

சுமந்திரன் அத்தோடு விடவில்லை. தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு பதிலடியும் கொடுத்தார்.

முன்னர் பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸ் நல்லாட்சி அரசின் வருகையோடு பதவி விலகினார். அல்லது விலக்கப்பட்டார். அவரை பின்னர் நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார்.

அதனைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ பதவியை விட்டு விலகிய பின்னர், ஜனாதிபதிப் பதவியை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க அதே மொஹான் பீரிஸின் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி பதவிக் காலத்தை இரண்டு தடவைகள் நீடித்தார். அது தப்பல்லவா என்ற சாரப்பட ரணில் விக்கிரமசிங்கவிடம் சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

“இல்லை, இல்லை, மொஹான் பீரிஸின் பிரதம நீதியரசர் பதவிக்காலம் சர்ச்சைக்குரியது. அவர் பிரதம நீதியரசர் பதவியில் இருக்கவில்லை என்று அப்போது ஜனாதிபதியாக இருந்த இதே மைத்திரிபால சிறிசேன (பக்கத்திலிருந்தவரைச் சுட்டிக்காட்டி) உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பின்படி மொஹான் பீரிஸ் முன்னாள் பிரதம நீதியரசர் அல்லர். அந்தக் காரணத்தினால்தான் அவரது ஐ.நாவுக்கான வதிவிடப் பிரதிநிதிப் பதவியை நான் நீடித்தேன்.” – என்று விளக்கம் கூறினார் ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்காவை வல்வந்தமாக அச்சுறுத்திப் பதவியிலிருந்து துரத்திவிட்டு, அந்த இடத்துக்கு பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ் நியமனம் பெற்றிருந்தார். ஆனால் நல்லாட்சி அரசு வந்ததும் முதல் வேலையாக மொஹான் பீரிஸின் நியமனம் சட்ட நீதியானது அல்ல என்று அறிவிக்கப்பட்டு, அந்த இடத்துக்கு மீண்டும் ஷிராணி பண்டாரநாயக்கா பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார் என்பதும், அவர் ஒரே ஒரு நாள் மட்டும் அடையாளத்துக்குப் பிரதம நீதியரசராக மீண்டும் பணியாற்றிவிட்டு ஓய்வில் செல்ல, அவரது இடத்துக்குப் புதிய பிரதம நீதியரசர் ஒருவர் நியமிக்கப்பட்டார் என்பதும் நினைவு கூரத்தக்கவை.

உயர் நீதிமன்ற வளாகத்தில் முன்னாள் பிரதம நீதியரசர்களின் படங்கள் வரிசையாகத் தொங்கவிடப்பட்டுள்ளன. அதில் மொஹான் பீரிஸின் படம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னாள் பிரதம நீதியரசர் என்ற கோதாவில் அவருக்கு அரச ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை. அந்தப் பின்புலத்தில் அவரை ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி பதவியில் ரணில் நீடிக்க அனுமதித்தமை தவறல்ல என்பது சட்ட வட்டாரங்களினால் இப்போது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

\+ + +

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழரசு ஆகிய நான்கு கட்சிகளையும் ஒன்றாக இணைத்து புரிந்துணர்வுடன் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை ஆரம்பித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தமது முயற்சி குறித்து இப்போது சற்று மன வேதனையில் இருக்கின்றார் என்று தெரிகிறது.

இவ்விடயத்தை ஒட்டி நேற்று முன்தினம் அவர் புளொட் தலைவர் சித்தார்த்தனையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனையும் நேரடியாக வீடு தேடிச் சென்று சந்தித்திருக்கிறார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுடன் தாம் பேசிய பின்னர் நான்கு கட்சிகளின் தலைவர்களும் ஓரிடத்தில் ஒன்று கூடி இருந்து பேசலாம் என்று சிவஞானம் யோசனை தெரிவித்துருந்தார். அதற்கு சித்தார்த்தனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் இணங்கி இருந்தனர் என்றும் தெரிகிறது.

தமது கூற்றுப்படி நேற்று செல்வத்தை நேரடியாகச் சந்திக்க முடியாத சி.வி.கே.சிவஞானம் அதன் காரணமாக செல்வத்துடன் தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடியும் இருந்தார்.

இதற்கிடையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி நேற்று இணுவிலில் நடத்திய கூட்டத்தில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவை ஏனைய சில கட்சிகளுடன் சேர்ந்து உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி கூட்டணிக்கான உடன்பாடு எட்டப்பட்டு இருப்பதான அறிவிப்பு வெளியாகி இருக்கின்றது.

தாம் நேற்று முன்தினம் சித்தார்த்தனையும் சுரேஷ் பிரேமச்சந்திரனையும் அவர்களது வீடு தேடிச் சென்று சந்தித்த சமயமும், தொடர்ந்து பேச்சு நடத்துவோம் என்று அவர்களோடு ஆலோசனை கலந்த போதும், அடுத்த நாள் – அதாவது நேற்று – ஏனைய பிற கட்சிகளுடன் இத்தகைய பேச்சு ஒன்றை நடத்த இருக்கிறோம், இணக்கம் காண இருக்கிறோம் என்ற தகவலை ஒரு பேச்சுக்குத் தன்னும் தன்னிடம் சித்தார்த்தனோ சுரேஷ் பிரேமச்சந்திரனோ பகிர்ந்து கொள்ளவோ, கோடி காட்டவோ இல்லை என்பது சி.வி.கே.சிவஞானத்தை பெரிதும் நோகடித்து இருப்பதாகத் தெரிகிறது. தமது முயற்சி தொடர்பில் மேற்படி மற்றைய இரு தலைவர்களும் தன்னோடு வெளிப்படையாகப் பேசாமல், ஒளித்து மறைத்துக் காய் நகர்த்துகின்றார்களோ என்ற சந்தேகம் சி.வி.கே.சிவஞானத்துக்கு ஏற்பட்டிருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

இனிமேலும் இந்தத் தலைவர்களை நம்பி அவர் தொடர்ந்து பேச்சு நடத்துவாரா தெரியவில்லை. பல தரப்பையும் சகித்துக் கொண்டு அரவணைத்து முன்னேறுவதுதானே அரசியல்! பழுத்த அரசியல்வாதியான சி.வி.கே.சிவஞானத்திற்கு அது புரியும் என்று நினைக்கிறேன்.

இதற்கிடையில் –

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி நேற்று இணுவிலில் நடத்திய சந்திப்பில் கலந்து கொண்ட பல்வேறு கட்சிகளும் சங்கு சின்னத்தில் ஒன்றுபட்டு இத்தேர்தலில் நிற்பதற்கு இணங்கி உள்ளன என்று வெளியான செய்தி தொடர்பில் ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சில விளக்கங்களைத் தெளிவு படுத்தியுள்ளது.

“ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னத்துக்கு மாறான நிலைப்பாட்டை எடுத்து, தென்னிலங்கைக் கட்சிகளை ஆதரித்த தரப்புகள், இந்தத் தேர்தலில் சங்குச் சின்னத்தில் களமிறங்கினால், அந்தக் கூட்டில் நாங்கள் வரமாட்டோம் என்பதை எங்கள் பிரதிநிதிகள் நேற்றைய இணுவில் கூட்டத்தில் தெளிவாக எடுத்துரைத்து விட்டனர்” – என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஆக, சங்கு சின்னத்தின் கூட்டணியில் ஆரம்பத்திலேயே சறுக்கல்கள் தொடங்கி விட்டன என்றே தோன்றுகின்றது.

இதே சமயம் நேற்றைய இணுவில் கூட்டத்தில், உத்தேச புதிய கூட்டணியில் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியை இணைத்துக் கொள்வது குறித்து சில சர்ச்சைகள் எழுந்தன எனத் தெரிகிறது.

“தமிழரசு கட்சியுடனும் பேசப்போகின்றீர்கள் என்று கூறுகிறீர்கள், தமிழரசுக் கட்சியையும் கூட்டில் வைத்துக் கொண்டு சமத்துவக் கட்சியையும் அதில் சேர்த்துக் கொண்டால், தமிழரசு கட்சியின் சிறிதரன் அந்த கூட்டுக்கு வர இணங்க மாட்டார், அவர் கட்சியிலிருந்தே வெளியேறி விடுவார்” – என்று ஒருவர் கூறினார்.

உடனே சடாரென அதற்குப் பதில் தந்தார் சமத்துவக் கட்சியின் தலைவர் சந்திரகுமார்.

“தமிழரசிலிருந்து சிறிதரன் வெளியேறினால் நல்லது. அந்த இடத்திற்கு நான் சென்று தமிழரசுடன் சேர்ந்து கொண்டு விடுவேன்.” – என்றார் சந்திரகுமார்.

ஏட்டிக்கு நல்ல போட்டிதான்...!

\+ + +

நேற்றைய தினம் இப்பத்தியில் இந்தியாவில் இருந்து ஐந்து மீனவப் பிரதிநிதிகள் கொழும்பு வருகின்றனர் எனவும், அவர்கள் கொழும்பில் அரச பிரதிநிதிகள் சிலரையும் கடற்றொழில் அமைச்சரையும் சந்திக்கும் அதேநேரம், தொடர்ந்து அடுத்து வரும் தினங்களில் யாழ்ப்பாணத்திற்கும் பயணித்து யாழ்ப்பாணத்திலும் சில மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளோடு பேச ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்திருந்தேன்.

அவர்கள் யாழ்ப்பாணத்தில் இங்குள்ள மீனவர்களைச் சந்திக்கும் நேரத்தில் அதில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக, யாழ்ப்பாணத்தில் சந்திப்பு நடக்கும் நாளில் இங்கு தமிழக மீனவர்களுக்கு எதிராக வடக்கு மீனவர்களின் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருக்கும் அரச தரப்பின் தில்லாலங்கடி விளையாட்டையும் நேற்று விவரித்திருந்தேன்.

அதன் தொடர் நிலைமையை இங்கே இன்று விவரிக்க வேண்டியிருகின்றது.

இச் சந்திப்புகளுக்காக நேற்றுக் காலை சென்னையில் இருந்து கொழும்பிற்கு வருகை தரும் விமானத்தில் பயணிப்பதற்கு இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் யேசுராஜா உள்ளிட்ட ஐவரும் சென்னை விமான நிலையத்திற்கு விடிகாலையில் வருகை தந்திருந்தனர்.

அங்கிருந்தபடி நேற்றுக்காலை வெளியான என் பத்தியின் இந்தச் செய்தி குறித்து எமது செய்தியாளருடன் அவர்கள் தொலைபேசியில் உரையாடியிருக்கின்றனர். அப்போதுதான் நேற்று அதிகாலையில் தமிழக மீனவர்கள் 18 பேர் மன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி நேற்றைய காலைமுரசின் 4 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியிருப்பதை

07

## இரகசியம் பரகசியம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் அவதானித்துள்ளனர்.

சென்னை விமானநிலையத்துக்கு வெளியில் நின்றபடி அந்தத் தகவலை அவர்கள் தேடிப் பார்த்த போதுதான் அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

இராமேஸ்வரத்தின் 32 மீனவர்களுடன் வந்த 5 விசைப் படகுகள் மன்னார் கடற்பரப்பில் இலங்கை கடற் படையினரால் பிடிக்கப்பட்ட செய்தி அவர்களுக்குக் கிட்டியது. அது மட்டுமல்ல, அவ்வாறு பிடிக்கப்பட்ட 5 விசைப் படகுகளில் ஒன்று இலங்கைக்குப் புறப்படவிருந்த இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் யேசுராஜாவிற்குச் சொந்தமானது என்பதுடன், அதில் இருந்த யேசுராஜாவின் மகன் உள்பட 7 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் தெரியவந்தது.

இதனால் யேசுராஜா உள்ளிட்டோர் இலங்கைக்கு விமானம் ஏறும் திட்டத்தை சென்னை விமான நிலையத்துடன் கைவிட்டு உடனடியாக இராமேஸ்வரம் நோக்கித் திரும்பி விட்டனர்.

இதனையடுத்து இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர். அது பற்றிய செய்தி 12ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

## அம்பாறையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ரகெட்டிய, எதரம தெனிய, கிராவெல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது என்றும், படுகாயமடைந்த நபர் தெஹியத்த கண்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழந்தார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச்சம்பவம்தொடர்பாகதெஹியத்த கண்டிய பொலிஸார் தீவிர விசாரணைளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்து எதிர்க்கட்சிகள் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். அரசமைப்பின் பிரகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக தீர்மானம் எடுப்போம்.

வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மற்றும் பண்டிகைக் கால விடுமுறை தொடர்பில் எதிர்க்கட்சிகளின் அரசியல் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரல் மற்றும் திகதி வாக்கெடுப்பு திகதி தொடர்பில் ஆளும் தரப்பினர் தமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும் தேர்தல் திகதி குறித்து இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை. அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும். வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்ததன் பின்னரே தேர்தலுக்கான வாக்கெடுப்பு திகதி அறிவிக்கப்படும்.

அனைவருக்கும் சாதகமான வகையில்தான் தேர்தல் திகதி அறிவிக்கப்படும். தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் போதுமான காலவகாசம் வழங்கப்படும்." – என்றார்.

## அரசின் மமதையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் ஊடாக அரசின் இயலாமையே வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் பதிவாகும்போதே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகியிருக்க வேண்டும். இரு பௌர்ணமிகளுக்குள் பாதாள உலகக் குழுக்கள் முற்றாக அழிக்கப்படும் எனக் கூறிய இவர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பில் கற்பதற்குக் கதிரைகளை எடுத்து வருமாறு எதிர்க் கட்சிகளை அழைத்தனர்.

இவ்வாறு மமதையில் இருந்ததால் தான் இன்று எதனையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று பொருளாதாரம் தொடர்பிலும் வாக்குறுதியளித்தனர். இந்தப் பிரச்சினைகளுக்கு இவர்களிடம் தீர்வு எதுவும் இல்லை.

கடந்த அரசுகளில் இடம்பெற்ற சம்பவங்களும் தற்போது இடம்பெறும் சம்பவங்களுக்கும் எவ்வித மாற்றமும் இல்லை.

கடந்த ஆட்சிக் காலங்களிலும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டபோது பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். அதே நடைமுறையையே தற்போதைய அரசும் பின்பற்றுகின்றது. எனினும், அன்றை விட இன்று பாதாள உலகக் குழுக்கள் வலுப்பெற்றுள்ளன.

நீதிவான் முன்னிலையிலேயே சந்தேகநபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுமளவுக்கு தேசிய பாதுகாப்பு மிகப் பாரதூரமான கேள்விக் குறிக்குள்ளாகியுள்ளது. இவ்வாறான நிலைமை சுற்றுலாத்துறையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்." – என்றார்.

## எமது நாட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொலவத்த தெரிவித்தார்.


நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது குறித்த விவாதம் இடம்பெற்று வருகின்ற போதிலும், தேசிய பாதுகாப்பு தொடர்பிலேயே பரவலாகப் பேசப்படுகின்றது. ஒருபுறம் பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெறும் அதேவேளை மறுபுறம் பொலிஸாரின் காவலில் உள்ள சந்தேகநபர்களும் உயிரிழக்கின்றனர்.

எமது ஆட்சியில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றபோது நாம் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கின்றோம். கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் குற்றவாளிகள் என உறுதிப்படுத்தப்படும் வரை அவர்களுக்குத் தண்டனை வழங்க முடியாது. அரசிலிருந்தாலும் எதிர்க்கட்சியிலிருந்தாலும் நாம் எமது நிலைப்பாட்டில் ஸ்திரமாகவுள்ளோம்.

இவர்களது ஆட்சி இவ்வாறுதான் தொடரும் எனில் எமது நாட்டை கடவுளின் பொறுப்பிலேயே விட வேண்டும். செலவுகள் ஏற்படும் என்பதால் முக்கியமான விடயங்கள் கூட இந்த அரசால் தவிர்க்கப்படுகின்றன. செலவுகளைப் பார்த்து பயந்து கொண்டிருக்காமல் வருமானத்தையும் அதிகரிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று நாட்டில் துப்பாக்கிகள் மிகவும் சரளமாக சமூகத்தில் புலக்கத்தில் உள்ளன. ஆனால், இந்த அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களின் துப்பாக்கிகளைக் கூட மீளப் பெற்றுக்கொண்டது. மறுபுறம் ரி – 56 ரக துப்பாக்கிகள் குறித்து தகவல்களை வழங்கினால் 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிடுகின்றார்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நிறைவேறா வாக்குறுதி!

"பொதுமக்களின் பாதுகாப்புக்காக உள்ள உத்தியோகபூர்வ அரச நிறுவனங்களில் சில நபர்கள் வரையில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் விரிவடைந்திருக்கின்றன. இது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எதிர்காலத்தில் நிச்சயமாக பாதாள உலகக் குழுக்களை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதற்குச் சிறிது காலம் எடுக்கும்."

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

பாதாள உலகக் குழுவினரை உரிய காலத்தில் ஒழித்துவிடுவோம் என கடந்த புதன்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தாலும், இத்தகைய உறுதிமொழி புதியதல்ல. அதே உறுதிமொழிகள் அவருக்கு முன்னோடிகளாக இருந்த ஜனாதிபதிகளினாலும் அவ்வப்போது வழங்கப்பட்டே வந்துள்ளன. ஆனால் அவை நடைமுறைச் சாத்தியமாகவில்லை.

அவருக்கு முன்பிருந்த ஜனாதிபதிகள் பாதாள உலகக் குழுவினரை எதிர்த்துப் போராடுவதற்குக் கூடுதல் சட்ட முறைகளைக் கூட நாடினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோன், பாதாள உலகக் குழுக்களுடன் சமாந்தரமாகப் பயணிக்கும் போதைப் பொருள் கடத்-தல் கும்பல்களையும் அவற்றின் நடவடிக்கைகளையும் அடியோடு அடக்குவதற்காக 'யுக்திய' எனும் பொலிஸ் கூட்டு நடவடிக்கையை போதைப்பொருள் சாம்ராஜ்யத்துக்கு எதிராக யுத்தப் பிரகடனம் போல முன்னெடுத்தார்.

அது ஓரளவுக்கு வெற்றியளித்தது என்பதை மறுப்பதற்கில்லை. போதை வஸ்து வர்த்தகம் அப்போது பெரும்பாலும் கணிசமான அளவில் முடக்கப்பட்டது. அதனோடு தொடர்புபட்ட பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டன.

ஆனால் ஆட்சி மாற்றத்துடன் அந்தக் கெடுபிடிகள் தளர்த்தப்பட, மீண்டும் பாதாள உலகக் கும்பல்கள் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளன.

அதை அடக்குவதாயின் முன்னர் போல பாதாள உலக கும்பல்களுக்கு எதிராக ஒரு யுத்தப் பிரகடனம் செய்யப்பட வேண்டும். இவ்விடயத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் கூட்டு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட வேண்டும். பாதாள உலகக் குழுவினரின் நடவடிக்கைகள் இரும்புக் கரம் கொண்டு கையாளப்பட வேண்டும்.

அதற்கான திராணியும், துணிவும், உறுதியும் இந்த அரசுத் தலைமையிடமும், பாதுகாப்புத் தொடர்பான அதன் வழிகாட்டல் தரப்புகளிடமும் இருக்கின்றனவா என்பதுதான் கேள்வி.

'மனமுண்டானால் இடம் உண்டு' என்பார்கள். உறுதி இருக்குமானால் இலக்கை அடைவதும் உறுதியாக இருக்கும்.

ஆனால் வலிமை பெற்றிருக்கும் பாதாள உலகத்தை கையாளக் கூடிய தனித்துவத் தந்திரோபாயமும், திறமையும், உறுதியும், தெளிவும், இலக்கு நோக்கிய விடாமுயற்சியும் இந்த ஆட்சி பீடத்திடம் - அதன் தலைமையிடம் - இருக்கின்றதா என்பது தான் கேள்வி.

முன்னைய அரசுகள் மீதும், அதிகாரத்தில் இருந்தோர் மீதும், பல குற்றச்சாட்டுப் பட்டியல்களை காலங்காலமாக அடுக்கி, அவற்றின் மூலம் மட்டுமே மக்கள் செல்வாக்கைப் பெற்று, அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த ஆட்சி பீடம், தான் அடுக்கிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறிந்து, நீதியையும் பொறுப்புக் கூறலையும் நிலை நாட்டுவதில் மெத்தனமாக இருந்து வருகின்றது என்பது அல்லது செயல் திறனின்றி நடந்து வருகின்றது என்பது தெளிவானது. இந்தச் சீத்துவத்தில் பாதாள உலகம் குழுக்களை இந்த அரசுத் தலைமை - ஆட்சிப் பீடம் - முழுமையாக அடக்கும் என்று கூறும் உறுதிமொழி நடைமுறைச் சாத்தியமாகும் என்று நம்புவதற்கு இடம் இருப்பதாக தெரியவில்லை.

# சிவனடி பாதமலைத் தொடர் வனப் பகுதியில் அதிக அளவில் வெப்பநிலை காரணமாகத் தீ!



நேற்று மதியம் மூன்று மணிக்கு சிவனடி பாத மலைத் தொடர் வனப் பகுதியான லக்ஷபான தோட்ட எமில்டன் பிரதேசத்தை ஒட்டிய வனப் பகுதியில் திடீர் எனப் பாரிய தீ பரவியுள்ளது என நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ பரவலின் போது மூன்று ஏக்கர் வனப் பகுதி நாசமடைந்து உள்ளது. மேலும் தீ பரவிவருகிறது.

இத்தீயை கட்டுபடுத்த முடியாத நிலையில் உள்ளது எனவும், கடும் வெப்பமான வானிலை காரணமாக அருகில் செல்ல முடியாத நிலை உள்ளது எனவும் நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

# கூரிய ஆயுதத்துடன் சந்தேக நபர் ஒருவர் சம்மாந்துறைப் பகுதியில் நேற்றிரவு கைது



**(தில்சாத் பர்வீஸ்)**

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு வேளையில் சம்மாந்துறை பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளினால் கூரிய வாளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, மலையடிக் கிராமம் 01 பகுதியில் வைத்து சென்னல் கிராமம் 02 பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையில் உத்தியோகத்தர் எ.ம். நிரஞ்சன் உள்ளிட்ட அதிகாரிகளினால் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மூத்த பத்திரிகையாளர் பாரதியின் இரங்கல் நிகழ்வு இன்று கொழும்பில்

மூத்த பத்திரிகையாளர் பாரதி இராஜநாயகத்தின் இரங்கல் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த அஞ்சலிக் கூட்டத்தில் தமிழ், சிங்கள பத்திரிகைகளின் மூத்த ஆசிரியர்கள், பிராந்திய செய்தியாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், தமிழ் இலக்கியத் துறையைச் சேர்ந்த ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான பாரதி, கொழும்பில் சிங்கள ஊடக அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டவராவார். அத்துடன் ஒன்றியத்தின் தலைவராகவும் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மீளாய்வின் பின்னர் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு பாதுகாப்பு; பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு மீளாய்வின் பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் அரசாங்கம் மீது அண்மை காலமாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் போதுமானளவு பாதுகாப்பை வழங்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவால் சபாநாயகருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வாறான பாதுகாப்பு வழங்கப்படாதென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.




# அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த மற்றும் அரிசியை மறைத்துவைத்திருந்த குற்றச்சாட்டில் 39 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கேகாலை, கம்பஹா மாவட்டங்களில் இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.



# 4 லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் வருகை

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 428,197 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி மாதத்தில் மாத்திரம் 252,761 பேர் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர்.

பெப்ரவரி மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 175,436 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் இந்தியாவிலிருந்தே அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இதன்படி, இந்தியாவிலிருந்து 25,293 பேரும், ரஷ்யாவிலிருந்து 22,280 பேரும் பிரித்தானியாவிலிருந்து 18,785 பேரும், ஜேர்மனியிலிருந்து 12,393 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.





# தேசிய பாதுகாப்பு குறித்து அரசாங்கம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

தேசிய பாதுகாப்பு குறித்து பாடம் கற்பிக்க வந்த அரசாங்கம், தற்போது தேசிய பாதுகாப்பு குறித்துக் கற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தெரணியகல பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் முன்னதாக தேசிய பாதுகாப்பு குறித்து கற்றுக் கொள்வதற்கு மேசையினையும் நாற்காலியினையும் எடுத்து வருமாறு கூறினார்கள்.

ஆனால் அவர்களுக்கு தற்போது தேசிய பாதுகாப்பு குறித்துக் கற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் சட்டம் மற்றும் அமைதியினை சீர்குலைக்கும் வகையில் மிலேச்சத்தனம் அதிகரித்துள்ளது.

நீதிமன்றத்தினுள் தாக்குதல் இடம் பெறுமானால் கூறுவதற்கு வேறு ஒன்றுமில்லை.

தேசிய பாதுகாப்பு குறித்து இந்த அரசாங்கத்திடம் எவ்விதமான பதில்களோ தீர்வுகளோ இல்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலே நாட்டு மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு முழுமையான அதிகாரத்தை வழங்கினார்கள்." – என்றார்.











# இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே நடைபெற்ற அவசர மீனவ ஆலோசனைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

மன்னார் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 32 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தியும் இந்த போராட்டம் நடைபெறவுள்ளது.



நேற்று நடைபெற்ற இந்த கூட்டத்தில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களை விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கையில் தமிழக மீனவர்களின் படகுகள் ஏலம் விடப்படுவதைத் தடுத்து படகுகளை மீட்க வேண்டும் எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று முதல் விசைப்படகு மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

# தொடர்ந்தும் கைதாகும் தமிழக மீனவர்கள்; ஜெய்சங்கருக்கு கடிதம் அனுப்பினார் ஸ்டாலின்





இலங்கை கடற்பரப்பில் இன்று அதிகாலை கைது செய்யப்பட்ட 32 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை சமீப காலங்களில் கவலை அளிக்கக் கூடிய வகையில் அதிகரித்துள்ளது என அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 32 மீனவர்களையும் அவர்களது 5 மீன்பிடி விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் நேற்று கைது செய்தனர்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று தாம் பலமுறை கேட்டுக் கொண்ட போதிலும், இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் தொடர்வதாக மு.க ஸ்டாலின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்கவும் வலுவான இராஜதந்திர முயற்சிகளை எடுக்க வேண்டும் என மு.க ஸ்டாலின் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# பதவியிலிருந்து விலகத் தயார்; உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு



தனது ஜனாதிபதி பதவியை விட்டுக் கொடுக்கத் தயார் என உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலஸ்கி தெரிவித்துள்ளார்.

இன்று உக்ரைனில் நடைபெறும் கூட்டத்தில் சில வலுவான முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாகவும் வொளாடிமிர் ஜெலஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், பல தசாப்தங்களாக பதவியில் இருப்பது தனது கனவு அல்ல எனவும், 20 வருடங்களுக்கு பிறகு அல்ல, இப்போது உக்ரைனின் பாதுகாப்பு தொடர்பிலேயே தான் கவனம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

இன்று உக்ரைனில் நடைபெறும் கூட்டத்தில் சில வலுவான முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாகவும், மேலும் ரஷ்யாவிற்கு எதிரான ஆதரவு மற்றும் தடைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தலைவர்களுடன் ஒரு தனி சந்திப்பு நடத்தவுள்ளதாகவும் உக்ரைன் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பைடன் மற்றும் ட்ரம்ப் நிர்வாகங்களின் ஆதரவுக்கு நன்றி என்று தெரிவித்த அவர், உக்ரைனுக்கு உதவ ஜனாதிபதி ட்ரம்பிடமிருந்து புரிதல் மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்களை பெற விரும்புவதாக குறிப்பிட்டார்.

மேலும், அமெரிக்க ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும், ஆனால் துரதிஷ்டவசமாக இன்னும் தங்களது சந்திப்பு இடம்பெறவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதுவொரு விளையாட்டு பொருள் அல்ல, போர் எனவே எங்களுக்கு கூட்டாண்மை தேவை, எங்களுக்கு உதவி தேவை, ஆனால் அதற்காக எமது சுதந்திரத்தை இழக்க முடியாது, எங்களது கண்ணியத்தை இழக்க முடியாது.

ஐரோப்பியத் தலைவர்களுடனான நாளைய உக்ரைனின் சந்திப்பு ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று நம்புவதாகவும் ஜெலஸ்கி குறிப்பிட்டுள்ளார்.





# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தாக்குதலுக்காக 267 ஏவுகணைகள் ஏவப்பட்டன எனவும் அதில் 138 ஏவுகணைகள் உக்ரைன் விமானப் படையினரால் இடைமறிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலினால் யுக்ரேனில் பல பகுதிகளில் பாரிய அளவிலான தீ விபத்துக்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் மூவர் அடையாளங்காணப்பட்டுள்ள நிலையில் ஏனையவர்களைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கார்கிவ்,கிவ் உள்ளிட்ட சுமார் 13 இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உக்ரைன் நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

3 பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஊடாகவும் தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பலமும் தேவை எனத் தாக்குதலின் பின்னர் உக்ரைன் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.02.2025

## மேஷம்

உங்கள் லட்சியங்களை அடைவதற்கு இது ஏற்ற நாள். இன்று வெற்றியும் வளர்ச்சியும் காணப்படுகின்றது. இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் மனநிலையில் இருப்பீர்கள்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மறையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் தரமான நேரத்தை இருவரும் ஒன்றிணைந்து செலவிடுவீர்கள்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும். உங்கள் நிதிநிலைமை மேம்படும்.

இன்று ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

இன்று மிகவும் அனுகூலமான நாள். உங்கள் லட்சியங்களை அடைவதற்கான அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது. உங்களின் உற்சாகமான போக்கால் இன்று வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்க நேரலாம். புதிய வேலை வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உண்மையான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையாது. சிறிய பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இன்று தைரியமும் உறுதியும் குறைந்து காணப்படும். உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். அதிகப் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் மருட்சி காரணமாக உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை உதிர்ப்பீர்கள். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையுடன் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். பணம் சேமிப்பதையும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று தலைவலி மற்றும் தொண்டை வலி காணப்படும்.

## கடகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி காண விழிப்புடனும் கவனமுடனும் இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் தவறுகள் ஏற்படாமல் இருக்க நீங்கள் மிகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை பேசுவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இதனை தவிர்த்தல் நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் பற்களில் கவனம் தேவை. உங்கள் உணவிலும் கவனம் தேவை.

## சிம்மம்

இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்திருக்கும். சிறந்த முடிவெடுக்கத் தக்க வகையில் உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும்.

நீங்கள் உங்கள் உறுதியான மன நிலை காரணமாக பணியில் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் முழு ஆதரவைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி பழகுவீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது. நீங்கள் திடமாக இருப்பீர்கள்.

## கன்னி

இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிட்டாது. இன்று சரியான முடிவெடுக்க மனதில் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். நெருக்கமானவர்களுடன் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படும். வாக்குவாதங்கள் எழும். இதன் காரணமாக கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். வீட்டைப் புதுப்பிப்பதற்காக பணத்தை செலவு செய்ய வேண்டியிருக்கும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## துலாம்

இன்று பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை தவிர்க்க வேண்டும். மனதில் தெளிவு ஏற்பட நம்பிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் குழப்பம் காரணமாக உங்கள் பணியில் தாமதங்கள் ஏற்படும். சக பணியாளர்கள் அதற்கு காரணமாக அமைவார்கள். எனவே திட்டமிட்டுக் கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் இருவரிடையே இடைவெளி அதிகரிக்கும். எனவே அத்தகைய போக்கை தவிர்த்து சகஜமாக இருக்க வேண்டும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளும் பொறுப்புகளும் அதிகமாக காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

## விருச்சிகம்

உங்கள் தினசரி செயல்களை ஒழுங்கு முறையுடன் ஆற்ற வேண்டும். தியானம் அல்லது ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்க முயன்றால் பலன் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும். பணியிடப் பதற்றத்தை வீட்டுக்குக் கொண்டு செல்லாதீர்கள். இது குடும்ப அமைதியைக் கெடுக்கும்.

உங்கள் மனதில் காணப்படும் பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க இயலாது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய பணம் கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 24.02.2025




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் உங்கள் முன் இருக்கும் சவாலான சூழ்நிலைகளை கையாண்டு ஆறுதல் பெருவீர்கள்.

இன்று பணியில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று பொறுப்புடனும் யதார்த்த அணுகுமுறையுடனும் இருப்பீர்கள். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சற்றே அனுகூலம் குறைந்து காணப்படும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அதன் மூலம் தன்னம்பிக்கை இழக்காமல் இருக்க முடியும். சம்பவங்களை லேசாகவும் நகைச்சுவை உணர்வுடனும் எற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இதனால் கவலை ஏற்படும். சகபணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள். இதனை உ'ங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். அனுசரித்துப் போகும் அணுகுமுறை தேவை.

தேவையற்ற செலவுகளால் கையிருப்பு பணம் கரையும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.




இன்று சிறப்பான நாளாக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை சுமூகமாக ஆற்ற வேண்டும். இதன் மூலம் வாழ்வின் நன்மை தீமைகளை அறிய இயலும்.

உங்கள் கடின உழைப்புக்கு மேலதிகாரிகளிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். கணிசமான தொகை சேமிக்கும் வாய்ப்பு உள்ளது.

மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இன்று தேவையற்ற வாக்குவாதங்களில் கலந்து கொண்டு உங்கள் மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனமாக இருப்பது நல்லது சக பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இது உங்கள் இருவரிடையேயான உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். எனவே நஷ்டம் ஏற்படாமல் இருக்க திட்டமிட்டு சூழ்நிலையை சிறப்பாகக் கையாள வேண்டும்.

இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

# அடையாளம் காணமுடியாத சடலம் ஒன்று காட்மோர் நீர் வீழ்ச்சிப் பகுதியில் மீட்பு!



மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள காட்மோர் நீர் வீழ்ச்சி பகுதியில் சில நாள்களுக்கு முன் இறந்த 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மிதப்பதாக நேற்றுக் கிடைக்கப் பெற்ற தகவலை தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார கருத்து தெரிவிக்கையில் –

சுமார் நான்கு, ஐந்து தினங்களுக்கு முன் இறந்த நபர் ஒருவரின் சடலம் இது எனவும், இறந்த நபர் பற்றிய விவரம் தெரியவில்லை எனவும், இன்று காலை சம்பவம் இடத்திற்கு நீதிவான் நேரில் வந்து பார்வையிட்ட பின்னர் உடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல பட்டு அங்கு உடற் கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது எனவும் குறிப்பிட்டார்.